[1993 ஏப்ரல் 30

வினா எண் 560, திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்,

560—

சத்துணவுக் கூடங்களில் முதியோருக்கு மூன்று வேளையும் உணவளித்தல்,

* 19123—திரு. வி. ரவிச்சந்திரன் :
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுக் கூடங்களில் முதியோர்க்கு மூன்று வேளையும் உணவு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போதிலிருந்து செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி சமூகநலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மூன்று வேளையும் உணவு அளிக்க இயலாது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ' இல்லை ' என்று கூறிவிட்டார்கள்,

'' காக்கை, குருவி எங்கள் சாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை ;
நோக்க நோக்கக் களியாட்டம் ''

காணும் வகையில் என அறிவித்து நிற்போரை சுண்டு விரல் அசைவினால் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் சத்துணவுக் கூடங்களில் முதியோருக்கு மூன்று வேளையும் வயிறறுக்குச் சோறிட வேண்டும்,

மாதர் தம்மை இழிவுசெய்யும்
மடமையைக் கொளுத்துவோம் ;

மங்காத விளக்கொளியாக விளங்கும் எங்கள் மாதரசியே. பசிப்பிணியை அகற்றும் மருத்துவம் மற்ற அணிகளுக்கு அணியான மணிமேகலையே தாயே, ஏழை முதியோருக்கு மூன்று வேளையும் சோறிட அரசு ஆவன செய்யுமா என்ற அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்,

1993 ஏப்ரல் 30]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சத்துணவுக் கூடங்கள் மதியம்வரை மட்டுமே செயல்படுகின்ற காரணத்தினால் அங்கே மூன்று வேளையும் உணவு அளிக்க இயலாது என்று மட்டுமே சொன்னேன். ஆனால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால் தமிழகத்தில் அதிகமான முதியோர் இல்லங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்குத் தமிழகத்தில் 53 முதியோர் இல்லங்கள் செயல் பட்டு வருகின்றன. இந்த முதியோர் இல்லங்களில் பயன் பெறக் கூடிய அனைத்து முதியோர்களுக்கும் மூன்று வேளையும் உணவு அளிக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டு மல்லாமல் முதியோர் உதவித் தொகையாக ரூ. 50 வழங்கப்பட்டு வந்ததை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் 75 ரூபாயாக உயர்த்தி ஆணை பிறப்பித்திருக்கிறார். அந்தப் பயனையும் இன்றைக்கு 5,30,000 பேர்கள் பெற்று வருகின்றார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் எவ்வளவு பேர்கள் பயனடை கிறார்கள் ; முதியோர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தின் கீழ் 2,30,554 பேர்கள் பயனடைகிறார்கள். ஒவ்வொரு முதியோருக் கும் 200 கிராம் அரிசியும், 15 கிராம் பருப்பும், நான்கில் ஒரு பங்குக்குக் குறையாமல் 1 கிராம் எண்ணெயும் 12.5 கிராம் அளவுக்கு காய்கறிகளும், 5 பைசா அளவுக்கு உப்பும் வழங்கப்பட்டு வருகிறது. சுமார் 6 கோடி ரூபாய் இதற்காக செலவிடப்படுகிறது. இதே போல, சத்துணவுத் திட்டத்தின் மூலமாக உணவு உட் கொள்ளும் நபருக்கு ½ கிலோ அரிசியும், உணவு உட் கொள்ளாவிட்டால் 1 கிலோ அரிசியும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இதைத் தவிர, அவர்களுக்கு பொங்கல், தீபாவளி போன்ற நாட்களில் இலவச வேட்டி. சேலை வழங்கப்படுகிறது. இதைத் தவிர, பேரறிஞர் அண்ணா, டாக்டர் புரட்சித் தலைவர் எம் ஜி.ஆர். பெருந்

தலைவர் காமராசர், டாக்டர் புரட்சித் தலைவி அவர் களுடைய பிறந்த நாள் போன்ற தினங்களில் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. தனபால்.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதவித் தொகை பெறுகின்ற முதியோர் மற்றும் ஊனமுற்றோர்கள் மட்டும்தான் இந்தத் திட்டத் தின் கீழ் பயன்பெறுகின்றார்களா? அப்படி என்று சொன்னால் எத்தனையோ தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்தவர்கள், முதியோர்கள், ஊனமுற்றோர்கள் இன்றைக்கு உணவுக்குக்கூட கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, உதவித் தொகை பெறுகின்றவர்கள் என்று மட்டும் இல்லாமல் மற்ற முதியோர்களுக்கும் இது விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் யாராக இருந்தாலும், எந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்களுக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு உணவு வழங்கி வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கேட்ட கேள்வி, உதவித் தொகை பெறாத அனைத்து முதியோர் களுக்கும் வழங்கப்படுமா என்பது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகை பெறாத அனைத்து முதியோர்களுக்கும் வழங்கப்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகை பெறுகிற வயதானவர்கள் மூன்று இடங்களிலே சான்றிதழ் பெற வேண்டியிருக்கிறது. கிராம அதிகாரி, கிராம ஆய்வாளர், அதே போல மருத்துவருடைய சான்றிதழைப் பெற வேண்டி யிருக்கிறது. விவரம் அறியாத அந்த வயோதிகர்கள், ஒவ்வொரு இடத்திற்கும் சென்று கஷ்டப்பட்டு அதை வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அந்த மனுக்களை மாதத்திற்கு ஒருமுறை வருவாய் ஆட்சியாளர்

மூலமாகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து, ஒரே நேரத்திலே முடித்துக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படுமானால், வயதான காலத்திலே கஷ்டப் படாமல் அந்த ஓய்வூதியத்தைப் பெறுகிற சூழ்நிலை உருவாகும். சில இடங்களில் நாங்களே நேரிடையாக அழைத்துச் சென்று பெற்றுத்தர வேண்டிய அளவிற்கு விவரம் அறியாத வயோதிகர்களுக்கு......

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, முதியோர் உதவி சாங்ஷன் செய்வது சமூக நலத்துறையிலே இல்லை, அது வருவாய்த் துறையிடம் இருக்கிறது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகைக்கான நிதி ஒதுக்கீட்டை சமூகநலத் துறை செய்வதால், நிச்சயமாக இதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

559—

புவனகிரி தாமரைக்குளம் தெருவிலுள்ள சத்துணவுக் கூடத்திற்குக் கட்டிடம்

* 16377 —செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி பேரூராட்சியில் தாமரைக்குளத் தெருவிலுள்ள சத்துணவுக் கூடத்திற்குக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பொதுமக்கள் நன்கொடை மூலமும், அரசு ஏற்கனவே ஒதுக்கியுள்ள தொகைகள் மூலமும் அவசியப்படும் அபிவிருத்திகளைச் செய்துகொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.